# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.201/2024

## அ.சா. 3 (LW 3)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. ஆரோக்கியசாமி** | **தொழில்** | |
| **த/ பெயர்** | ஜோசப்சாமி முத்து | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **02.04.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 9 எதிரிகள் ஆஜர். 10 ,11வது எதிரிகள் VC மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தழகுபட்டியில் குடியிருந்து லோடு மேன் வேலை செய்து வருகிறேன். அ.சா.2 என் மனைவி ஆவார்.. எனக்கு 3 மகன்கள் உள்ளார்கள். இறந்து போன அருளானந்த பாபு எனது 2வது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளையும் VC மூலம் ஆஜராகியுள்ள எதிரிகளையும் எனக்கு தெரியாது. முருகேஷ்வரியின் மகன்களான மூர்த்தி மற்றும் சக்திவேல் இருவரும் இறந்து போன என் மகனின் அருளானந்த பாபுவின் நண்பர்கள் ஆவார்கள். அதனால் சக்திவேலையும், மூர்த்தியையும் யாரோ கொன்று விட்டார்கள். அதனால் அந்த குடும்பத்திற்கு யாரும் பாதுகாப்பு இல்லாததால் என் மகன் அருளானந்த பாபு போக , வர இருந்தார். நான் கடந்த 2 வருடத்திற்கு முன்பு திண்டுக்கல்லில் உள்ள மேற்குரத வீதியில் நான் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது என் மகன் அருளானந்த பாபுவை அகஸ்தியர் தெப்பம் அருகே யாரோ வெட்டி கொலை செய்து விட்டார்கள் என எனக்கு போன் வந்தது. உடனே நான் அங்கு சென்று என் மகனை பார்த்தேன். என் மகனுக்கு கை, கால் மற்றும் தலையில் வெட்டுப்பட்டு இருந்தது. நான் என் மகனை தொட போன போது அங்கிருந்தபோலிசார் என் மகனை தொட விடவில்லை. அங்கு போலிசார் தவிர வேறு யாரும் இல்லை. அதன் பிறகு என் மகனை GHக்கு ஆம்புலன்ஸ் மூலமாக எடுத்து சென்றார்கள். நான் ஆட்டோ பிடித்து அங்கு சென்றேன். என் மகனை சவக்கிடங்கில் வைத்து விட்டார்கள். என் மகனை அடுத்தநாள் காலை கையெழுத்து செய்து விட்டு என் மகனின் பிரேதத்தை வாங்கி விட்டு அடக்கம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்த போதும் இதே விவரங்களைத்தான் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் 164 வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.3.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( 10 எண்ணிக்கை) .

<u>**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது.**</u> **அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

என் பெரிய மகன் பெயர் ஜோசப் ஸ்டீபன் ராஜ் ஆகும். அவரது மனைவி பெயர் ஜென்சிகிரேனி ஆகும். என் மருமகளுக்கு 11வது எதிரி அலெக்ஸ்ராஜ் சித்தி மகன் ஆவார். முருகேஷ்வரியின் இரண்டு மகன்களும் கொலையுண்டு இறந்து போனதால் அந்த வழக்குகள் சம்மந்தமாக முருகேஷ்வரியை நீதிமன்றத்திற்கு இறந்து போன என் மகன் அருளானந்த பாபுதான் அழைத்து செல்ல உதவியாக இருந்தார் என்றால் சரிதான். என் மகன் இறக்கும் 07.08.2023க்கு ஒரு வாரத்திற்கு முன்பு எங்கள் ஊரில் செபஸ்தியார் திருவிழா நடந்தது என்றால் சரிதான். அப்போது என் மகன் அருளானந்த பாபு முருகேஷ்வரியின் மகன்களாள தட்சணாமூர்த்தி மற்றும் சக்திவேல் கொலை வழக்குகளில் கொலை செய்தவர்களுக்கு தண்டனை கிடைக்கப் போகுது என்று சொன்னதை அதை அருகிலிருந்து கவனித்து வந்த அலெக்ஸ் நண்பரான சைமன் செபஸ்டியான் உனக்கு என்ன சந்தோசமாக இருக்கா, அதற்கு முன் உன்னை போட்டுத் தள்ளுகிறோம் என்று என் மகனிடம் சொன்னதை என்னிடமும், என் கணவரிடமும் சொன்னார் என்றால் சரியல்ல. ஊரில் இருப்பவர்கள் என் மகன் முருகேஸ்வரியின் வீட்டில் இருப்பதால் ஆபத்து இருக்கிறது என்று கூறினார்கள், அதனால் நானும் என் மனைவியும் என் மகனை முருகேஷ்வரி வீட்டிற்கு செல்ல வேண்டாம், சென்னைக்கு சென்று விடலாம் என நான் சொன்னேன், அதற்கு என் மகன் இரும்மா ஒரு வாரம் கழித்து போகலாம் என்று சொன்னார். 07.08.2023 அன்று மதியம் 03.00மணிக்கு என் மகன் வெளியே போய்விட்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு சென்றார் என்றால் முருகேஷ்வரி வீட்டிலிருந்து தான் போயிட்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு வந்தார். அதன்பிறகு 04.00மணி வாக்கில் முருகேஷ்வரி எனக்கு போன் செய்து அகஸ்தியர் தெப்பம் கோவில் அருகில் கன்னிமார் கோவில் பக்கம் சிலர் ஆயுதங்களுடன் என் மகனை விரட்டி செல்வதாக தகவல் கூறினார் என்றால் சரிதான், ஆனால் யார் சொன்னார்கள் என தெரியாது. நானும் என் மனைவியும் தகவல் கேள்விப்பட்டு உடனடியாக வீட்டிலிருந்து புறப்பட்டு கன்னிமார் கோவில் வருவதற்காக எங்கள் ஊர் ஒற்றைப்பனை மரம் அருகே வந்த போது நான்கு இருசக்கர வாகனத்தில் சுமார் 10 பேர்கள் வந்தார்கள் என்றும், அதில் எங்கள் ஊரைச் சேர்ந்த ஆஜர் எதிரிகளான சைமன் செபாஸ்டின், வெஸ்ட்லின் அபிசேக், சரத்குமார், கிசோர் வேளாங்கண்ணி, சுள்ளான் பிரசன்னா, அந்தோணி டேவிட் என்ற டேனி, மற்றும் அவருடன் வந்தவர்களும் என் மகனின் கதையை முடித்து விட்டதாகவும், நீங்களும் ஒழுக்கமாக இல்லை என்றால் உங்களுக்கும் இதே கெதிதான் என மிரட்டி விட்டு என் மகனைப் போய் பார் என சொல்லி விட்டு மோட்டார் சைக்கிள்களில் வலது பக்கமாக சென்று விட்டார்கள் என்றால் சரியல்ல. நான் யாரையும் பார்க்கவில்லை. ஆஜர் எதிரிகள்தான் முருகேஷ்வரியின் மகன்களின் கொலை வழக்கில் தண்டனை கிடைக்கப் போகிறது என்ற ஆத்திரத்தில் முருகேஷ்வரிக்கு உதவியாக இருந்த என் மகனை காலி செய்தால்தான் முருகேஷ்வரிக்கு பயம் வரும் என்று எனது மகனை ஆயுதங்களால் தாக்கி கொலை செய்தார்கள் என்றால் சரிதான். 07.08.2023 அன்று காலை 11.00மணிக்கு என் மகன் உயிருக்கு பயமாக இருக்கிறது என தெற்கு

காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்ற விவரம் போலிசார் சொல்லிதான் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நடந்த விவரங்களை கூறிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு பயந்து கொண்டு உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள்தான் முருகேஷ்வரியின் மகன்களின் கொலை வழக்கில் தண்டனை கிடைக்கப் போகிறது என்ற ஆத்திரத்தில் முருகேஷ்வரிக்கு உதவியாக இருந்த என் மகனை காலி செய்தால்தான் முருகேஷ்வரிக்கு பயம் வரும் என்று எனது மகனை ஆயுதங்களால் தாக்கி கொலை செய்தார்கள் என போலிசார் சொல்லி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 11 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை அனுசரித்து ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.04.02 21:59:59 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.